# භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
# திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
# Department of Treasury Operations

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General | දුරකථන / தொலைபேசி / Telephone | +94 11 2484729 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax | +94 11 2431498 | ඊ-මේල් / மின்-அஞ்சல் / E-mail: dgto@tod.treasury.gov.lk |


| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My Number | TO/DCM/Daily Bal/2015 | ඔබේ අංකය / உமது இல / Your Number | - |
| දිනය / திகதி / Date | 2016.10. 20 | | |

திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இல: 6/2016

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும்
இலங்கை இராணுவம்/கடற்படை/விமானப் படைத் தளபதிகள் அனைவருக்கும்

**<u>அரசாங்க உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் பயன்படுத்தப்படாத காசு மீதியினைப் பேணுதல்</u>**

சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற்றினது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் ரூபா 100 மில்லியனை விஞ்சிய பயன்படுத்தப்படாத காசு மீதிகளை பேணிவருவது பொதுத் திறைசேரியினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, உங்களது அமைச்சு/திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து உத்தியோகபூர்வ வங்கிக்கணக்குகளினதும் நிதி நிலமையினை கண்காணித்ததன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் (Vouchers) மீது செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு தொகைக்கு மாத்திரம் கட்டு நிதிக்கு வேண்டுகோள் விடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை ஏற்பாடு செய்யுமாறு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றீர்கள். மேலும், காசோலைகள் மூலமான கொடுப்பனவுகளில் அனைத்து நிலுவைகளும் உரிய முறையில் செலுத்தப்பட்டமை, உரிய தரப்பிற்கு முறையாக அனுப்பி வைக்கப்பட்டமை மற்றும் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் அவை மாற்றப்பட்டமையும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

2016.11.01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் நிதிப் பிரமாணக் குறிப்பு 177 இற்கு அமைவாக ஆகக் குறைந்த நிதித் தேவைப்பாடுகளை பேணும் அதேவேளை, உங்களது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளிலுள்ள பயன்படுத்தப்படாத காசு மீதிகளை பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

கொடுப்பனவுகளுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நி.பி. குறிப்பு 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால், உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் மாற்றப்படாத காசோலைகள் தொடர்ச்சியாகப் பேணப்படுகின்றன. இவை தொடர்பில் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதில் நீங்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்